# I. பொருளாதாரச் செயலாற்றமும் சிக்கல்களும் கொள்கைகளும் — 1976

## முன்னுரை

1976இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் கடந்த நான்கு ஆண்டுகளின் அளவினை ஒத்தே விளங்கியது. இக்காலப்பிரிவில் வேளாண்மைத் துறையின் செயலாற்றம் வழக்கத்திற்குப் பெருமளவு குறைவான நிலையில் விளங்கியதே இம்மிதமான வளர்ச்சிக்குக் காரணமாகும். பல ஆண்டுகட்குப் பின், வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கு இந்நாட்டிற்குச் சார்பாக அமைந் துள்ளது. கைத்தொழில் நாடுகள், பொருளாதார வளர்ச்சியை மீளப் பெற் றமையே ஏற்றுமதி விலைகள் தொடர்ந்து முன்னேறியமைக்கு முதன்மைக் காரணமாக விளங்கியது. சென்ற ஆண்டுகளில் இறக்குமதி விலைகள் உயர்ந்து சென்றமைக்கு மாறாக, 1976இல் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியுற்றமை நாட் டின் வர்த்தக நிலையை வலிவுபடுத்தியது. அரிசி, கோதுமை, கோதுமை மா, சீனி போன்றவற்றைப் பெரிதும் உள்ளடக்கும் உணவு இறக்குமதிகளின் விலை கள் கணிசமானளவு வீழ்ச்சியுற்றமைக்கு, இப்பண்டங்களின் உலக உற்பத்தி அதிகரித்தமையே காரணமாகும். எனினும், கைத்தொழில் நாடுகளின் பண வீக்க நிலைமைகளையும், பெற்ரோலிய விலைகளின் அதிகரிப்பினையும் எடுத்துக் காட்டும் முறையில் இடைநிலை முதலீட்டுப் பொருட்களின் விலைகள் உயர்ந்து செல்லும் போக்கினையே தொடர்ந்து காட்டின. வர்த்தக மாற்று விகிதத்தின் விரைந்து வீழ்ச்சியுறும் போக்கினை மாற்றும் முறையில் 15 ஆண்டுகளில் முதன் முறையாக ஏற்றுமதி இறக்குமதி விலைகளின் மொத்த அசைவுகள் விளங்கின. வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட திருந்திய நிலை, வணிக வர்த்தகத்தில் மிகச் சிறிய குறையை ஏற்படுத்தியது. இறைத்துறையில் வரவுசெலவுத் திட்டக் குறை, கணிசமானளவு நிதியின் விரிவு மூலங்களிலிருந்து நிதியிடப் பட்டது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புடன் இத்துறை இணைந்ததன் விளைவாக பண நிரம்பலில் என்றுமில்லாத அதிகரிப்பு ஏற்பட் டது.

1976இல் நடைமுறை விலைகளில் ரூ. 2,40,810 இலட்சமென மதிப்பிடப் பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 9.8 சதவீதத்தால் அதிகரித்தது. உண்மை நியதிகளின்படி, மொத்தத் தேசிய உற்பத்திகளின் அதிகரிப்பு 3.0 சதவீத மாகும். 1.6 சதவீதமாக விளங்கும் முறையில் மக்கட்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் தனியாளின் உண்மை உற்பத்தி 1.3 சதவீதத் தால் உயர்ந்துள்ளது. இது 1975இல் 3.6 சதவீதம்கொண்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியுடனும் 2.0 சதவீதம்கொண்ட தனியாளின் உண்மை உற்பத்தியின் அதிகரிப்புடனும் ஒப்பிடத்தக்கது. மூலதன ஆக்கம் 7.3 சதவீதத்தால் அதிகரிக்கையில் உள்நாட்டுச் சேமிப்பு வீதம் 1975இல் 11.2 சதவீதத்திலிருந்து 1976இல் 14.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வேளாண்மைத் துறையின் ஏற்ற இறக்கச் செயலாற்றமே கடந்த சில ஆண்டுகளாக மிதமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டமைக்குப் பெருமளவு காரணமாக விளங்கியது. வேளாண்மை, தனிப்பெரும் துறையாக விளங்கு வதுடன், மொத்தத் தேசிய உற்பத்தியில் மூன்றிலொரு பகுதிக்கு வகைகூறு